***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 1189/2025 – P.W. 4 (LW5)***

| | |
|---|---|
| *Name* | இளங்கோவன் |
| *Father/Husband's Name* | த/பெ.கிருஷ்ணன் |
| *Village* | வடுவூர் வடபாதி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *43* |

*எதிரி நீதிமன்றக்காவலில் உள்ளார். கானொலிமூலம் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.*

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 14.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் நீடாமங்கலம் தாலுக்கா மூவர்க்கோட்டை கிராமத்தில் கிராமநிர்வாக அதிகாரியாக பணிசெய்து வருகிறேன். கானொலிமூலம் ஆஜர்படுத்தப்பட்ட நபரை தெரியும்.

2. கடந்த 05.11.2025 ஆம் தேதி நான் நீடாமங்கலம் தாலுக்கா மூவர்க்கோட்டை கிராமத்தில் கிராமநிர்வாக அதிகாரியாக பணிபுரிந்தபோது காலை 5.00 மணியளவில் மூவர்க்கோட்டை கிராமத்தில் சுதா என்பவருடைய நகையை அம்மாப்பேட்டை செல்லும் வழியில் ஐயர் களத்துக்கு அருகே மறைந்திருந்து சுதா என்பவரின் நகையை பறிக்கும் நோக்கத்தோடு வண்டியை வழிமறித்தும் அவரை அரிவாளால் வெட்டி, மிரட்டி நகையை எதிரி பறித்த சம்பவம் தொடர்பாக அன்றைய தினம் இரவு 9.00 மணியளவில் வடுவூர் காவல் ஆய்வாளர் சுரேஷ்குமாரை கைது செய்துள்ளதாகவும் அவரை ஆஜர்ப்படுத்த நேரில் அழைத்தார். நான் வடுவூர் காவல்நிலையம் சென்றேன். என்னுடன்உதவியாளர் கலியபெருமாள் என்பவரையும் அழைத்துச்சென்றேன். அங்கு ஆய்வாளர் எதிரியை என் முன்னிலையில் ஆஜர் படுத்தி எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல்

வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்து கொண்டு அதன் அடிப்படையில் அவர் எடுத்து ஆஜர் செய்த ஒரு முருக்குச்செயின் மற்றும் J.S என்ற ஒரு டாலரையும் அவரது பையில் வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகசர் மூலம் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். அதில் சாட்சியாக இருந்து நானும் கலியபெருமாள் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில்உ ள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பங்கள் **அசாஆ. 2 மற்றும் 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் காவல்நிலையத்தில் இருந்து என்னை எப்போது அழைத்தார்கள் என்றால் இரவு 9.00 மணிக்கு அழைத்தார்கள். அப்போது நான் எனது உதவியாளரை அழைத்துச்சென்றேன். எனது இருப்பிட முகவரி எது என்றால் வடுவூர் வடபாதி. வடுவூர் வடபாதியில் இருந்து காவல்நிலையம் எத்தனை கி.மீ என்றால் 2 கி.மீ. வடுவூர் வடபாதியில் இருந்து மூவர்க்கோட்டை எத்தனை கிமீ என்றால் 6 கிமீ. இந்த வழக்குச்சம்பவம் போலீசார் சொல்லிதான் எனக்கு தெரியுமா என்றால் காலையிலேயே தெரியும் . யார் மூலம் தெரியும் என்றால் உதவியாளர் மூலம் தெரியும். சம்பவ இடத்திற்கு நான் சென்று பார்வையிட்டேனா என்றால் இல்லை. முதல் விசாரணையில் சொன்ன வழக்குச்சம்வம் எனக்கு போலீசார் சொல்லிதான் தெரியும் என்றால் சரியல்ல. நான் பொதுவாக எந்த ஒரு ஆவணத்திலும் கையெழுத்து செய்தால் அதில் முத்திரையை பதிவு செய்வேன் என்றால் சரிதான். நான் அன்றைய தினம் காவல்நிலையத்தில் என்னிடம் எத்தனை பேப்பரில் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள் என்றால் இரண்டு பேப்பரில் . அந்த இரண்டு பேப்பரிலும் நான் கையெழுத்து செய்து முத்திரையிட்டு கொடுத்துள்ளேனா என்றால் ஒன்றில் மட்டும் கையெழுத்து செய்து முத்திரையிட்டுக்கொடுத்தேன். அந்த கையெழுத்திட்டு முத்திரை செய்து கொடுத்த பேப்பர் என்ன பேப்பர் என்றால் வழக்கு சம்பந்தமாக ஆவணம். என்ன ஆவணம் என்று தெரியவில்லை. என்னிடம் கையெழுத்து வாங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் ஏற்கனவே டைப்பு செய்து இருந்ததா என்றால் இல்லை. நான் சென்றபிறகுதான் டைப் செய்யப்பட்டு கையெழுத்து வாங்கினார்கள். நான் காவல்நிலையத்தில் 1.3/4 மணிநேரம்

இருந்தேன். ஆனால் காவல்நிலையத்திற்கு செல்லும்போது மணி 9.30 இருக்கும். நான் காவல்நிலையம் செல்லும்போது எதிரி எங்கு இருந்தார் என்றால் காவல்நிலையத்தில் வராண்டாவில் உட்கார்ந்திருந்தார். வடுவூர்காவல்நிலையம் வடக்கு பக்கம் வாசல் உள்ள காவல்நிலையம் என்றால் சரிதான். அந்த காவல்நிலையத்திற்கு இடது பக்கம் வடக்கு தெற்காக முக்குளம் சாத்தனூர் ரோடு உள்ளது என்றால் சரிதான். நான் சென்றபோது எதிரியை காவல்நிலையத்திற்கு வெளிப்புறத்திலோ, சாலை ஓரத்திலோ அமரவைக்கவில்லை என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் இரண்டையும் படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன் என்றால் படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். உதவியாளரும் நான் படித்து பார்த்து சொன்னதை கேட்டு கையெழுத்து போட்டார். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி நாள் , இடம் , நேரம் என்ற காலத்தில் 05.11.2025 ஆம் தேதி 22.45 மணிக்கு வடுவூர் காவல்நிலையம் முன்பாக என எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். காவல்நிலையத்தின் உட்புறத்திற்கும், வெளிப்புறத்திற்கும் வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும். நான் கையெழுத்து செய்த மகசரில் காவல்நிலையத்திற்கு வெளியே வைத்து கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்டதாக சொன்னால் சரிதான். நான் ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகசரிலும், ஒரே நாளில், ஒரே நேரத்தில் கையெழுத்திடவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையாக ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகசரிலும் ஒரே நாள், ஒரே நேரத்தில் கையெழுத்திட்டிருந்தால் எனது கையெழுத்துக்கு கீழ் என்னுடைய அலுவலக முத்திரையை பதிவு செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக என்னவென்று தெரியாது என்றும், என் முன்பாக எந்த வழக்கு தடயப்பொருட்களையும் கைப்பற்றப்படவில்லை என்றும் புலன் விசாரணை அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களால் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது உதவியாளரும் கையெழுத்து செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. பின்னர் கால அவகாசத்திற்கு பிறகு தயார் செய்த கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது உதவியாளரும் கையெழுத்து செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. என் முன்பாக எதிரியை கைது செய்யவில்லை என்றும், எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றும், எந்த

தடயப்பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையாக இந்த வழக்கில் என்னை சாட்சியாக விசாரித்திருந்தால் கைப்பற்றப்பட்ட இடத்தை குறித்து சரியாக சாட்சியமளித்திருப்பேன் என்றாலும், பொய்சாட்சியமளிப்பதால்தான் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 1189/2025 – P.W. 5(LW7)***

| | |
|---|---|
| *Name* | வெங்கட்ராமன் |
| *Father/Husband's Name* | த/பெ.சாமியய்யா |
| *Village* | பழஞ்சேரி மேடு |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 77 |

*எதிரி நீதிமன்றக்காவலில் உள்ளார். கானொலிமூலம் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.*

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 14.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பாபநாசம் தாலுக்கா கம்பர் நத்தம் கிராமத்தில் கிராமநிர்வாக அதிகாரியாக பணிசெய்து தற்சமயம் பணி ஓய்வு பெற்று மூவர்க்கோட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். இந்த கையெழுத்தை கடந்த 05.11.2025 ஆம் தேதி மாலை 4, 5 மணியளவில் வழக்கின் சம்பவம் நடந்த இடமான ஐயர் வயல் களத்தடி அருகே வடுவூர் போலீசார் சம்பவ இடத்தை பார்யையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் எங்கள் முன்னிலையில் தயார் செய்தார்கள் . அதில் நானும் சிவக்குமார் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். **மேற்படி பார்வை மகசர் அசாஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் கு,,வி**

எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியமளித்த அனுபவம் உண்டா என்றால் உள்ளது. ஐயர்களத்தடிக்கும், பழஞ்சேரி கிராமத்திற்கும் எவ்வளவு துாரம் என்றால் முக்கால் கிமீ இருக்கும். வரைபடம் வரைந்த இடத்திலேயே என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். அதன்பிறகு எதிரியின் வீட்டை காண்பிக்கச்சொன்னார்கள். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஐயர்களத்தடி அருகில் டீக்கடை எதுவும் இருக்கிறா என்றால் எதுவும் இல்லை, எனக்கு அங்கு வயல் உள்ளது. வேலை இருந்தால் போவேன். போலீசார் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தபொழுது என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் சிவக்குமார் என்பவர் உடன் இருந்தார். வேறு யாரும் இல்லை. சிவக்குமாருக்கு சொந்த ஊர் எது என்றால் மூவர்க்கோட்டை. சிவக்குமார் சுதாவிற்கு உறவினரா என்றால் இல்லை. எனது உறவினர். நானும் , சிவக்குமாரும் அம்மாப்பேட்டைக்கு சென்று விட்டு வரும் வழியில்தான் போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அங்கு யார் விசாரித்தார்கள் என்றால் சாதாரண போலீசார்தான் விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் வழக்கு சம்பவ இடத்தில் எவ்வித கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சுதா எனது உறவினரா என்றால் இல்லை. ஊர்க்காரர். சுதா எனது ஊர்க்காரர் என்ற அடிப்படையில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்தவ ழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை காவல்நிலையத்திற்கு அழைத்து விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகசரில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும், காவல்நிலையத்திற்கு அழைக்கப்பட்டு அங்கு வைத்துதான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. அதனால்தான் என்னை எந்த அதிகாரி விசாரித்தார் என்பதை சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi